''அளம்'' நாவலில் பெண் சித்தரிப்புகள்

முனைவர் த.க.ஜாஸ்மின் சுதா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

சுருக்கம்

நாவலாசிரியர் சு.தமிழ்செல்வி கீழ்த்தஞ்சை மாவட்டத்தை கதைக்களனாகக் கொண்டு எழுதுபவர். திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். படைப்புலகில் தனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கியவர். அவர் பிறந்த ஊர், வளர்ந்த வளர்ப்புமே அவரை ஒரு படைப்பாளியாக்கியது என்று அவரே கூறுவதை எளிய கிராமத்து பிறப்பும், வளர்ப்புமே என்னை எழுதத்தூண்டின என்ற வரிகள் மெய்ப்பிக்கின்றன. தான் அன்றாடம் சந்திக்கும் பெண்களின் வாழ்க்கைப் போராட்டங்களையே தன்னுடைய கதைக்களங்களாக ஆசிரியர் உருவாக்கிக் கொள்கிறார். சு.தமிழ்செல்வியின் அளம் என்ற நாவலில் பெண் சித்திரிப்புகள் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை மையப்படுத்தி இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது. சு.தமிழ்செல்வியின் ''அளம்'' என்ற நாவல் மட்டுமே ஆய்வுக் கட்டுரையின் முதன்மை ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. பெண் உழைப்பை எடுத்துரைக்கும் இந்நாவலில் பெண் உழைப்பால் எவ்வாறு சுரண்டப்படுகிறாள்? அவள் அன்றாட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எவை? அவற்றிற்கு நாவலில் எத்தகைய தீர்ப்பு கொடுக்கப்படுகிறது என்பதை ஆய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

திறவுச்சொற்கள்: சுந்தராம்பாள், வடிவாம்பாள், ராசாம்பாள், அஞ்சம்பாள், பூச்சி, தொம்மட்டி பழங்கள், பெரியங்கச்சி, நடுதங்கச்சி, சின்னங்கச்சி

முன்னுரை

''அளம்'' நாவல் வேதாரண்யம் அருகிலுள்ள கோயில் தாழ்வு என்ற கிராமத்தில் உள்ள உப்பளம், அதில் வேலை பார்க்கும் பெண்கள் குறித்த நிகழ்வுகளை கொண்டு எழுதப்பட்டுள்ளது. பெண்கள் கல்வி நிறுவனங்களில், வேலை பார்க்கும் இடங்களில், திருமண வாழ்க்கையில் என எல்லா தருணங்களிலும் பாதிக்கப்படுகிறாள். ஆண் துணையின்றி வாழும் பெண்கள் இச்சமூகத்தால் எவ்வாறு நடத்தப்படுகின்றனர் என்பதையும் நாம் பார்க்க முடிகிறது. கணவனால் கைவிடப்பட்ட பெண் தன் மூன்று பெண் குழந்தைகளுடன் தனியாக உழைத்து, அளத்தைச் சொந்தமாக்கிக் கொள்கின்ற நிலை ''அளம்'' நாவலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஒரு பெண்ணின் பணிப் பகிர்வு என்பது தாயாக, மனைவியாக, மருமகளாக என மூன்று நிலைகளில் உறுதி செய்யப்படுகிறது. இதையே இலக்கியங்களும் எடுத்துரைக்கின்றன. பெண்ணுக்கு இழைக்கப்படும் அநீதிகளை இன்றைய புதினங்கள் வெளிக்கொணர்கின்றன.

''அளம்'' நாவலில் உப்பளத்தில் வேலை செய்யும் பெண்களின் நிலை எடுத்துரைக்கப்படுகிறது. ஆண்களும், பெண்களும் சேர்ந்து வேலை பார்க்க வேண்டியிருப்பதால் பல இடையூறுகளை சந்திக்க வேண்டி வரும். இதனைக் கருத்தில் கொண்டு ''அஞ்சம்மாள்'' என்ற கதாப்பாத்திரம் தனது கூட்டாளி பூச்சியின் கிழிந்த சட்டையையும், கால்சட்டையையும் மாட்டிக் கொண்டு வேலை செய்கிற காட்சி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வேலை எதுவும் செய்யாமல் வெட்டியாய் ஊர் சுற்றுகின்ற சுப்பையன் சிங்கப்பூர் சென்று விட அதன் பிறகு அவனைக் குறித்த எந்தவித தகவலும் இல்லாதபோது, அவன் மனைவி

சுந்தரம்பாள் தனது பச்சிளங்குழந்தை அஞ்சம்பாள், மூன்றுவயதான ராசம்பாள், எட்டு வயதான வடிவாம்பாள் ஆகியோர் தினமும் ஒரு வேளை உணவுக்காக போராடுகின்ற நிலையையும் அதன்பின் உப்பளத்தில் வேலை செய்து காலத்தைக் கடத்தக் கூடிய காட்சியை காண முடிகிறது. நான்கு உயிர்கள் மூன்று வேளையும் பசியாற உண்ண வழியில்லாத போது தானாய் வளர்ந்து கிடக்கும் கிழங்கு வகைகள், கீரை வகைகளை உணவாக உட்கொள்கின்ற நிலையை நாவலாசிரியர் காட்சிப்படுத்தியுள்ளார்.

எத்தகைய துன்பத்திலும் தான் இருக்கும் கிராமத்தை விட்டு செல்லாத பிடிவாத குணம் உடையவளாக சுந்தராம்பாள் என்ற கதாப்பாத்திரம் படைக்கப்பட்டிருக்கிறது. வைராக்கியமாக இருந்து உழைத்து தனது மகள்களுக்கு திருமணம் செய்து வைக்கிற ஒரு கதாப்பாத்திரமாகவும், தினக்கூலிக்கு உப்பளத்தில் வேலைக்குப்போய் சம்பாதித்து சொந்தமாக ஒரு உப்பளத்தையே விலைக்கு வாங்கக்கூடிய கடின உழைப்பாளியாக படைக்கப்பட்டிருக்கிறாள். தனது இரு மகள்களும் திருமணவாழ்க்கையில் தோல்வியுற்று திரும்பி வந்தபோது அவர்களும் குழந்தைகளும் தினக்கூலிக்கு வேலைக்குச் செல்லாமல் தனக்குச் சொந்தமான உப்பளத்திலேயே உழைத்து வாழ வழிவகை செய்கின்ற எதிர் நீச்சல் போடுகின்ற ஒரு கதாப்பாத்திரமாக சுந்தராம்பாள் படைக்கப்பட்டிருக்கிறாள் எனலாம். முதலில் தன் குழந்தைகளுக்காக வாழ்ந்த சுந்தராம்பாள் பின் தன் குழந்தைகளின் குழந்தைகளுக்காக வாழுகின்ற சூழலைப் பார்க்க முடிகிறது.

இன்று நிறம் ஒரு பெண்ணுக்கு பெரிய பிரச்சினையாக சமுகத்தில் இருந்து வருகிறது. கருமைநிறம் ஒரு பெண்ணின் வாழ்க்கையில் இடராக இருப்பதை இன்றளவும் நாம் பார்க்க முடிகிறது. ''அளம்'' நாவலில் சுந்தராம்பாளின் மூன்று பிள்ளைகளுமே கருப்பு. முத்த மகளாக வரும் வடிவாம்பாள் மிகவும் கருமை நிறம். இதனாலே இவளுக்கு வரக்கூடிய வரன்கள் எல்லாம் பெண் கருப்பாக இருக்கிறாள் என்று ஒதுக்கி விடுகின்றனர். இவ்வாறு ஆண்வர்க்கம் புறந்தள்ளுவதால் ஒரு பெண்ணினுடைய மனநிலை எவ்வளவு பாதிக்கப்படும் என்பதை, பெரியப்பா என்னை விடக் கருப்பாயிருக்கிற சம்மந்தமாயிருந்தா அழைச்சிக்கிட்டு வாங்க. இல்லன்னா வுட்ருங்க நா இப்புடியே இருந்திட்டுப் போறங் (அளம், ப.43) என்ற நாவல் வரிகள் உணர்த்துகின்றன. அது மட்டுமன்றி வடிவாம்பாள் தனது தாய் குறுப்பு(ஜாதகம்) பார்க்க செல்லும் போது, குறுப்பு பாத்த மட்டும் மாப்புள்ளைவொ வாசல்ல வந்து வரிசையில் நிக்கப் போறானு வொளா (அளம், ப.62) என்று கூறி ஜாதகம் பொருத்தினாலும் என் கருப்பு நிறத்துக்கு ஒருவனும் வரமாட்டான் என்று எதிர்மறையாக சிந்திக்கக் கூடிய ஒரு பெண்ணை நாம் பார்க்க முடிகிறது. யாங் கருப்ப பார்த்துட்டு எல்லா கருப்பும் பயந்து ஓடிடும்மா என்று வடிவாம்பாளே தனது நிறத்தைக் குறித்து கேலியாக பேசுவதுண்டு. ஜாதகப் பொருத்தம் பார்த்து வடிவாம்பாளுக்கு கட்டிவைத்து இரண்டு திருமணமுமே நிலைக்காமல் போனதிலிருந்து ''ஜாதகம்'' பார்ப்பது என்பது தவறு மனப்பொருத்தம் தான் திருமண வாழ்க்கைக்கு முக்கியம் என்பதை நாவலாசிரியர் கூறிச் செல்கிறார்.

சுந்தராம்பாள் தனது இரண்டாவது மகள் ராசாம்பாளுக்கும் ஜாதகம் பார்த்து திருமணம் செய்வதை பத்து பொருத்தமும் பொருந்தியிருக்கு கட்டுனா இந்தப் பொண்ணதாங் கட்டுவோம் (அளம், ப.190) என்ற வரிகள் உணர்த்துகின்றன. ராசாம்பாளுக்கு முன்று குழந்தைகள் பிறந்தவுடன் அவள் கணவன் வேதப்பன் வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருப்பதை அறிந்து தாலியை கழற்றி எறிந்துவிட்டு தாய் வீட்டிற்கு வந்து உப்பளத்தில் வேலை பார்த்து தன் குழந்தைகளை காப்பாற்றுகின்ற நிலையை நாவலாசிரியர் காட்சிப்படுத்துகிறார்.

தனது இரண்டு சகோதரிகளின் வாழ்க்கையை கண்கூடாக கண்டு வளர்ந்த அஞ்சம்பாள், பூச்சியை காதலித்தாலும் அவனை திருமணம் செய்யாமல் உப்பளத்திலேயே வேலை செய்ய செல்கின்றதை பார்க்க முடிகிறது. நாவல் முழுக்க வடிவாம்பாள் பெரியங்கச்சி பெரிய மொட்டை என்றும், ராசாம்பாள் நடுக்கச்சி என்றும், அஞ்சாம்பாள் சின்னங்கச்சி என்றும் சுந்தரம்பாள் சுந்தரம் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

பொண்ணு பாக்க யாராவது வந்தா சீல கட்டிக்கிட்டுத்தான் நிக்கனும்? ஒனக்கு எனக்கு இனிமே அதெல்லாம் சீலதாங் நல்லது (அளம், ப.83) என்று சந்தரம்பாள் தன் மகள் வடிவாம்பாள் தாவணிகட்டும் பருவத்திலேயே சேலை எடுத்து வைப்பதை பாரக்க முடிகிறது. எதையுமே முன்கூட்டியே சிந்தித்து செயல்படுகின்ற சுந்தரம்பாளை நமக்கு அடையாளப்படுத்துகிறது. ஆனால் அவளுடைய அடிமனதில் நம்மை இந்த இடத்தில் விட்டுச் சென்ற கணவன் என்றாவது ஒருநாள் வருவான். நான் இன்று இருக்கும் நிலையை அவன் பார்க்க வேண்டும் என்ற ஒரு வைராக்கியம் அவளிடம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஓர் ஆணின் துணையின்றி மூன்று பெண் குழந்தைகளை வளர்த்து, ஆளாக்கி இரு பெண்களின் திருமணத்தை ஒரு சேர நடத்தி வைக்கின்ற மன வலிமையுடையவளாக சுந்தராம்பாள் கதாப்பாத்திரம் படைக்கப்பட்டிருக்கிறது எனலாம்.

துணை நூற்பட்டியல்

1. *தமிழ்ச்செல்வி, சு. 2014 : அளம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.*
2. *முத்துச்சிதம்பரம், 1995 : பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.*
3. *அரங்க. மல்லிகா, 2002 : தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.*